செய்தி வெளியீடு எண் :153 நாள் :13.04.2015

**மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில்**
**தமிழகம் முழுவதும் கடந்த இரு மாதங்களில் 1749 சிறப்பு மருத்துவ முகாம்கள்!**
**5,25,016 பேர் பயன்பெற்றனர்!**
**பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று 333 கூடுதல் மருத்துவ முகாம்கள்**
**கடந்த ஆண்டைவிட 81,144 நபர்கள் கூடுதலாக பயன்!**
**பயனடைந்தவர்கள் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் தமிழக அரசிற்கும் நன்றி பாராட்டு!**

----

சுகாதாரச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாடு, வளர்ந்த நாடுகளுக்கு இணையாக சுகாதாரத் தரத்தை அடையவேண்டும் என்பதும், பேறுகாலங்களில் குழந்தைகளை ஈன்றெடுப்பதில் அனைத்து பெண்களுக்கும் உரிய சமமான, கண்ணியமிக்க, சமூக நீதியுடன் கூடிய தாய்சேய் நல சுகாதார சேவைகள் மற்றும் பேறுக்கு பிந்தைய சேவைகளும் எளிதில் கிடைக்கும் வண்ணம் உயர்தர மருத்துவ வசதிகள் அமையப் பெற வேண்டும் என்பதும் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் குறிக்கோளாகும்.

தமிழகம் முழுவதும் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையிலும், அனைவருக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சைகள் கிடைக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி மக்கள் வசிக்கும் இடத்திற்கே மருத்துவர்கள் நாடிச் சென்று சேவையாற்றிடும் வகையில் மக்கள் நல்வாழ்வுத்துறை கடந்த பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருத்துவ துறையின் சார்பில் முதல் கட்டமாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பயன் பெறும் வகையில் 670 சிறப்பு மருத்துவ முகாம்கள் தமிழகம் முழுவதும் கிராமப் பகுதிகளில் நடத்தியது. இம்முகாம்களில் 1,55,020 பெண்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

சிறப்பு முகாம்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு முழு பேறுகால பரிசோதனை மற்றும் தடுப்பூசிகள், இரத்தம் மற்றும் முழு ஆய்வக பரிசோதனை, ஸ்கேன் பரிசோதனை அனைத்து தாய் சேய் நல விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்து பிக்மி எண் (PICME Number) வழங்குதல், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தில் பதிவு செய்தல், மருத்துவ நிபுணர்களின் பேறுகால பராமரிப்பு குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல், சிறப்பு கவனம் தேவைப்படும் தாய்மார்களுக்கு உடன் மருத்துவ உயர் சிகிச்சைக்கு பரிந்துரைத்தல், 5வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு சிறப்பு பரிசோதனைகள் ஆகிய சேவைகள் வழங்கப்பட்டன.

கிராமப்புற பொது மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்ற இம்முகாம்களை நகர் பகுதிகளிலும் நடத்திட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று இரண்டாம் கட்டமாக தமிழகம் முழுவதும் சிறு நகர் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் 167 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் 31,607 பெண்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர். மார்ச் மாதம் 8ம் தேதி உலக பெண்கள் தினத்தையொட்டி மருத்துவக் கல்வித் துறையின் சார்பில் பெண்களுக்காக கர்ப்பப்பை புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோயை கண்டறிந்து சிகிச்சை வழங்கும் வகையில் தமிழகம் முழுவதும் 8 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 5358 பெண்கள் கலந்து கொண்டு பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும், மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட 845 சிறப்பு முகாம்களில் 1,91,985 பெண்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மருத்துவ கல்வித்துறையின் மூலம் அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளின் சார்பில் முதல் கட்டமாக 67 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 35,868 நபர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர். மருத்துவமனைகளுக்கு வெளியே நகர் மற்றும் கிராம பகுதிகளில் மக்கள் வசிக்கும் இடங்களில் அங்குள்ள சமுதாய கூடங்கள், பள்ளி வளாகங்களில் முகாமிட்டு நடத்தப்பட்ட இச்சிறப்பு மருத்துவ முகாம்களில் இருதயம் மற்றும் இருதய அறுவை சிகிச்சை, புற்று நோய் மருத்துவம், மூட்டுவலி, இடுப்பு வலிக்கான சிகிச்சைகள், இடுப்பு மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, கண் நோய்கள், காது, மூக்கு, தொண்டை பிரச்சினைகள், கர்ப்பப்பை நோய்கள், நுரையீரல், சிறுநீரக நோய்கள், மூளை மற்றும் நரம்பு மண்டலம், இரத்த குறைபாடு, தொற்று நோய், தோல்வியாதி, இரைப்பை மறறும் குடல் நோய்கள் போன்ற நோய்களுக்கு பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்பட்டது. உயர்சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு அருகாமையிலுள்ள பன்நோக்கு சிறப்பு மருதுவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் இலவசமாக உயர் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று இரண்டாம்கட்டமாக 56 சிறப்பு முகாம்கள் இத்துறையின் மூலம் தமிழகம் முழுவதும் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டு அதில் 34,351 நபர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள், ஆகியவை மூலம் 110 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் 72,581 நபர்கள் கலந்து கொண்டு உயர் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட 670 தனியார் மருத்துவமனைகள் (Empanelled Hospitals under CMHIS) சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் 1,75,051 நபர்கள் கலந்து கொண்டு தரமான சிகிச்சை பெற்றுள்ளனர். உயர் சிகிச்சை தேவைப்பட்டவர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் இலவசமாக சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம், அரசு பல் மருத்துவர்கள் சங்கம், அரசு சித்தா மருத்துவர்கள் சங்கம், உதி கண்மருத்துவமனை, அப்போலோ மருத்துவமனை ஆகியவை ஒன்றினைந்து, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 67வது பிறந்த நாளை முன்னிட்டு 10 நாள் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு அதில் 15,180 அரசு அலுவலர்கள், ஊடக பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

கடந்த இரு மாதங்களில் தமிழ்நாடு முழுவதும் இரண்டு கட்டமாக நடத்தப்பட்ட 1749 மருத்துவ சிறப்பு முகாம்களில் மொத்தம் 5,25,016 நபர்கள் கலந்து கொண்டு பரிசோதனைகள், சிகிச்சைகள், உயர்சிறப்பு சிகிச்சைகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டு 1320 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அதன்மூலம் 4,44,072 நபர்கள் பயன் பெற்றனர். கர்ப்பிணித் தாய்மார்களுக்காக நடத்தப்பட்ட சிறப்பு மருத்துவ முகாம்களில் 1,02,030 பெண்கள் பயன்பெற்றனர். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதலாக 429 முகாம்கள் நடத்தப்பட்டு 81,144 நபர்கள் மருத்துவ வசதிகளும், சிகிச்சையும் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 89965 பெண்கள் கூடுதலாக பயன் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வாண்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்களில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் திட்டங்கள் பற்றியும் தாய்மார்கள் பேறுகாலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள், பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு,தொற்று நோய், மற்றும் தொற்றா நோய்கள் குறித்து விழிப்புணர்வு கையேடுகள் வீடியோ, குறும்படங்கள் மூலமும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இது மக்களிடையே மாபெறும் வரவேற்பை பெற்றது.

முகாமில் பயன்பெற்ற மகளிர் மற்றும் பொது மக்கள் கூறும்பொழுது நாங்கள் வசிக்கும் இடத்திற்கே தேடிவந்து மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள், மருந்து, மாத்திரைகள் அளித்தும் இலவசமாக வழங்கியதோடு மட்டுமல்லாமல் மேல் சிகிச்சை தேவைப்பட்டவர்களை உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் பெரிய மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று தரமான சிகிச்சைகள் வழங்கி காப்பாற்றியுள்ளார்கள்.

மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படாத பல புதிய உன்னத திட்டங்களை தமிழக மக்களுக்கு வழங்கி சிறப்பாக செயல்படுவதை உலக சுகாதார நிறுவனம், மத்திய அரசு, யுனிசெப் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் மனதார பாராட்டுகின்றன. தமிழகத்தில் செயல்படுத்தும் சுகாதார திட்டங்களை பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளது தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறையின் சாதனைகளுக்கு சிகரம் வைத்தாற்போல் உள்ளது.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலோடு தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அனைத்து திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற நிலையை தொடர்ந்து கடைபிடிக்கும் என்பது உறுதி.

**வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்பு துறை, சென்னை.**